**பாடம் - 1**

**தூய்மையின் சட்டங்கள்**

**சுத்தமும் அசுத்தமும்**

**الدرس الأول**

**الطهارة والنجاسة**

அசுத்தம்: ஒரு முஸ்லிம் எதை விட்டும் தவிர்ந்து கொள்வதும் அது பட்ட இடத்தைக் கழுவதும் கடமை யாகுமோ அதுவே அசுத்தம் எனப்படும்.

உடையிலோ, உடலிலோ அசுத்தம் பட்டுவிட்டால் அது பார்வைக்குத் தென்படக்கூடிய மாதவிடாய் இரத்தம் போன்ற அசுத்தமாக இருந்தால் அதைக் கழுவுவது கடமையாகும் கழுவிய பிறகு நீங்குவதற்கு சிரமமான சுவடு எஞ்சி யிருந்தால் அது பற்றிக் குற்றமில்லை. பார்வைக்குத் தென்படாத அசுத்தமாக இருந்தால் ஒரு தடவையேனும் அதைக் கழுவினால் போதும்.

தரையில் அசுத்தம் பட்டுவிட்டால் அதில் தண்ணீரை ஊற்றிவிடுவதன் மூலம் அது சுத்தமாகின்றது. அதுபோல அசுத்தம் திரவப்பொருளாக இருந்தால் அது காய்ந்துவிடுவதன் மூலமும் தரை சுத்தமாகின்றது. அசுத்தம் திடப்பொருளாக இருந்தாலோ அதை நீக்கினாலே தவிர தரை சுத்தமாகாது. மழை நீர், கடல் நீர் போன்றவை சுத்தம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும். அவ்வாறே பயன்படுத்தப்பட்ட தண்ணீரையும் சுத்தம் செய்வதற்காக மீண்டும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதுபோன்றே சுத்தமான பொருள் தண்ணீருடன் கலந்து தண்ணீர் எனும் நிலையை மாற்றி விடாமல் அதன் அசல் தன்மை யிலேயே இருந்தால் அந்தத் தண்ணீரையும் சுத்தம் செய்யப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் சுத்தமான பொருள் தண்ணீருடன் கலந்து தண்ணீர் எனும் நிலையை மாற்றிவிட்டால் அந்தத் தண்ணீரை சுத்தம் செய்யப் பயன்படுத்தக் கூடாது. அசுத்தம் கலந்துவிட்ட நீரைப் பயன்படுத்தக் கூடாது. இது நீரின் சுவையையோ வாடையையோ அல்லது நிறத்தையோ அந்த அசுத்தம் மாற்றி விட்டால்தான். அவற்றில் எதுவும் மாறவில்லையெனில் சுத்தம் செய்வதற்காக அதைப் பயன்படுத்துவது கூடும்.

பாத்திரத்திலிருந்து குடித்து மீதமுள்ள தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்வதும் ஆகுமானதே. ஆனால் நாய், பன்றி குடித்து மீதமான தண்ணீரைத் தவிர. ஏனெனில் இந்தத் தண்ணீர் அசுத்தமாகும்.